# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

அக்டோபர் 2019

திபி 2050 . மலர் 1 . இதழ் 7



# பதிப்புரை

விக்கிரவாண்டி நாங்குநேரி, புதுச்சேரி காமராசர் நகர் தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

வழக்கம்போல், இடைத்தேர்தலில் நடக்கும் அனைத்தும் நடந்து முடிந்துள்ளது.

நம்முடைய வாக்கு விகிதம் அதிகரித்துள்ளது.

கூடவே நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம் இருப்பதையும் காட்டியுள்ளது.

.விடியலுக்கான நேரம் தூரமில்லை .

வெல்லப்போறான் விவசாயி !

ஆசிரியர் குழு

## இவ்விதழில்

1. வடமொழி பெயர்
2. தீபாவளி தமிழர் பண்டிகையா?
3. மக்கள் களம்

“எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."

- தலைவர் பிரபாகரன்

# வடமொழியில் பெயர் சூட்டுவது நாகரிகமாக மாறியது ஏன் ?



தாழ்வு மனப்பான்மை தான் காரணம்.

எப்போதும் நாம், நமக்கு மேல் அந்தஸ்தில் உள்ளவராக நாம் நினைப்பவரை நகல் அடிப்போம். அரிசி சாப்பிடுவதில் தொடங்கி, வெள்ளை நிறம் மேல் மயங்கி, கிழிந்த பேண்ட் போட பழகுவதுவரை இப்படித்தான்.

இந்தியா விடுதலை அடைந்தபின்பு, வலுவான பதவிகளில் சில குறிப்பட்ட சமூகத்தினர் அதிகமாக இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் வடமொழிப் பெயர்களையே வைத்திருந்தனர். அவற்றைப் பார்த்து மக்கள் வடமொழிப் பெயர்கள் நோக்கி நகர்ந்தனர்.

60 70 களில் திராவிட இயக்கத் தாக்கம் காரணமாக, நிறைய தமிழ்ப் பெயர்கள் வைக்கப்பட்டன.

80 களில், திராவிட இயக்கங்களின் தாக்கம் குறையத் தொடங்கியது. இக்காலக்கட்டத்தில், பக்தி இயக்கங்கள் தோன்றின. இதனால் வடமொழி சமயப் பெயர்கள் அதிகரித்தன.

80களில் தொடங்கி மெதுவாக அதிகரித்து, வடமொழி பெயர் சூட்டுவது 90களுக்குப் பிறகு மிகவும் அதிகரித்தது.

90 களில் நடுத்தரக் குடும்பங்கள் அதிகரித்தன. தொலைக்காட்சி பெரிய கதவை திறந்து வைத்தது.

தொலைக்காட்சியில் வரும் வடமொழிப்பெயர்கள் மக்களை ஈர்த்தன. வடமொழி ஓசைகள் கவர்ந்தன. திரைத்துறையும் மிக முக்கிய காரணம்.

அசோகன் அசோக் ஆனது. சங்கரன் சங்கர் ஆனது. அன் விகுதியே தமிழ் ஆண் பெயர்களின் முக்கிய அடையாளம்.

அவை போல, இ, ஐ, ஆள் விகுதிகள் பெண் பெயர்களில் குறைந்துபோனது.

சமூகத்தில் மேல் நோக்கி நகர வேண்டும் என எண்ணிய நடுத்தர வர்க்கத்தினர், மேல் தட்டைப் பார்த்து 'போலப் பழகினர்'.

2000 க்கிற்குப் பிறகு, இப்போது நியூமராலஜியும் நட்சத்திரமுமே பெரிதும் பெயர்களைத் தீர்மானிக்கிறது. வித்தியாசமான பெயர்கள் வைக்க வேண்டும் என வைக்கின்றனர்.

பல பெயர்களின் அர்த்தங்கள் அதிர்ச்சியுற வைக்கும் வகையில் உள்ளன.

தன் வேர்களின் மேல் தன்னம்பிக்கையுள்ள எந்த சமூகமும் 'போலப் பழகுவது' இல்லை.

எடுத்துக்காட்டாக, செட்டி நாட்டுப் பகுதிகளில் பொருளாதாரத்தில் செழுமையான ஒரு சமூகம், இன்றும் மிகப் பழையத் தமிழ்ப் பெயர்களையே வைக்கிறது. அவர்கள் பிறப் பெயர்களை வைப்பதேயில்லை.

தமிழ்ப் பெயர்கள் பெரும்பாலும் சமய சார்பற்றவை. ஆனால், சமயப் பெயர்கள் கடந்த 30 வருடங்களில் மிகவும் அதிகரித்துள்ளது.

இதன்மூலம் வடமொழி மட்டுமல்லாது, ஆங்கில, அரேபியப் பெயர்களின் தாக்கமும் அதிகரித்துள்ளது. ஆரோக்கியசாமி, அருள்மரியாள் போன்ற பெயர்களை இப்போது பார்ப்பது குறைவாகவே உள்ளது.

உண்மையில் பழைய தமிழ்க் கிறித்துவப் பெயர்கள் இலத்தீன், எபிரேய உச்சரிப்புக்கு நெருக்கமானவை. ஆங்கிலேயர்கள் தவறாக உச்சரிக்கின்றனர். மரியம் என்பதே சரி. மேரி தவறு. இயேசுவே சரி. ஜீஸஸ் தவறு. யோசேப்பு சரி. ஜோசப் தவறு.

அவ்வாறே பிச்சைக்கனி, சர்க்கரைப்பீர் போன்ற பெயர்களும் இப்போது குறைவு. இதுவும் மாறி வருகிறது. என் இஸ்லாமிய நண்பர் ஒருவர் இட்ட பெயர் இறையன்பு. கதாபி என்ற அரேபியப் பெயரின் அர்த்தம் அதுவேவாம்.

மகிழ்ச்சிக்குரிய விடயம் என்னவென்றால், இப்போது நிறைய மக்கள் நல்ல தமிழ்ப் பெயர்களை வைக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

தமிழ் வேர்களின் ஆழத்தையும் பெருமையையும் உணர்கின்றனர்.

இணையத்திலிருந்து ஆசிரியர் அனுமதி பெற்று வெளியிடப்படுகிறது

# தீபாவளி தமிழர் பண்டிகையா?

தீபாவளி வந்துவிட்டது. நம்மூரில் நரகாசுரர் இறந்த நாள் என்றும், வடநாட்டில் ராமன் ராவணனை அழித்த நாள் என்றும் கொண்டாடுகிறார்கள்.

இதை நினைத்ததும் முதலில் தோன்றிய கேள்வி, ஒருவரின் இறப்பை கொண்டாடுபவர்களாக தமிழர்கள்?

சங்க இலக்கியத்தில் தீபாவளி பற்றி ஒரு குறிப்பையும் காணவில்லை. அது கூட ஆச்சரியமல்ல, புரிந்துகொள்ளக்கூடியது.

கட்டுக்கதைகளெல்லாம் இல்லாமல் தமிழன் இயற்கையோடு வாழ்ந்த காலம் அது.

ஆனால் ஆச்சரியம் அளிக்கும் வகையில், பக்தி இலக்கியங்களிலும் அதன் குறிப்புகள் இல்லை. திருவோணம் தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வந்ததை கூட நாம் அதிலிருந்து அறிகிறோம். ஆனால், ஓர் இடத்திலும் தீபாவளியைக் காணவில்லை.

அவ்வாறெனில் எங்கிருந்து வந்தது தீபாவளி?



ஒளி விழா தீபாவளி எனக் கூறுவோரும் உண்டு.

ஐப்பசி மாதத்தில், தமிழகத்தில் கடும் மழைக்காலம். மாலையிலும் காலையிலும் வடகிழக்குப்பருவ மழை வெளுத்துக் கொண்டிருக்கும். அதில் எப்படி விளக்கு ஏற்றி ஒளி விழா கொண்டாட முடியும்?

தமிழர்கள் இயற்கையைப் பொறுத்தே விழாவைக் கொண்டாடினார்கள். ஒவ்வொரு பருவத்தையும் வரவேற்றார்கள்.

அவ்வாறெனில் இயற்கைக்கு மாறாக எவ்வாறு ஒரு விழா அமைய முடியும்?

அவ்வாறே மழைக்காலம் முடிந்து குளிர்காலம் தொடங்கும்போது ஓர் ஒளி விழா கொண்டாடினார்கள்.

அது திருக்கார்த்திகை.

கார்த்திகை விண்மீன் நிலவின் அருகே தோன்றும் மாதமே கார்த்திகை மாதம். அம்மாதத்தின் முழு நிலவு நாளே திருக்கார்த்திகை. முன்னோரை நினைவு கூறும் நாளாகவும் அது இருந்திருக்கிறது.

பின் எப்படி தீபாவளி தமிழகத்திற்குள் வந்தது?

அதற்கு நாம் விசய நகர அரசு காலத்திற்கு செல்ல வேண்டும். தமிழகம் தெலுங்கு அரசர்கள் கீழ் இருந்தபோது, அவர்கள் மூலமே தமிழகத்திற்குள் நரக சதுர்தசி அல்லது தீபாவளி வந்தது. அந்த அரசர்களைப் பார்த்து, அவர்களுக்கு நெருக்கமாக இருந்த சில சமூகங்கள் அதைக் கொண்டாடத் தொடங்கின.

அது எப்படி பிரபலமடைந்தது?

14 ஆம் நூற்றாண்டிலேயே தீபாவளி தமிழகத்திற்குள் வந்து, சில சமூகங்கள் அனுசரித்தாலும் கூட, தீபாவளி மிகப் பிரபலமைந்தது, கடந்த 30 ஆண்டுகளுக்கு உள்ளாகத்தான்.



90களில் நகரங்களில் சில சமூகங்களிடையே மட்டும் தான் தீபாவளி இருந்து வந்தது.

தனியார்மயமாக்கலுக்குப் பிறகு, பல பன்னாட்டு நிறுவனங்கள், வடநாட்டு மக்களை ஈர்க்கும் வகையில், பல தள்ளுபடிகளை தீபாவளித் தொடங்கி ஆங்கில புத்தாண்டு வரை அறிமுகப்படுத்தினர். இது தமிழகத்திலும் தீபாவளி பொருட்கள் வாங்கும் நேரமாக பிரபலமடைய ஆரம்பித்தது. கூடவே சிவகாசி பட்டாசும் சேர்ந்து கொண்டது. இனிப்புக் கடைகள் போட்டிப் போட்டுக் கொண்டு பிரபலப்படுத்தின. புதிதாக வந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் இதற்கு பயன்பட்டன.

மொத்ததில் தீபாவளி, பழைய அட்சய திரிதியை.

இன்றும் தீபாவளியில் பெரிதாக வழிபாடு இல்லை. கிராமங்களில் பொங்கல் அளவு தீபாவளி கொண்டாடப்படுவதில்லை.

ஒன்று வந்தால் ஒன்று மங்கும் என்பதற்கேற்ப நரக சதுர்தசி வர திருக்கார்த்திகை பின் சென்றது. சங்க இலக்கியங்களில் உள்ள தமிழரின் உண்மை விழாக்களில் ஒன்றான திருக்கார்த்திகைக்கு இன்று அரசு விடுமுறை கூட இல்லை.

தீபாவளி தமிழர் பண்டிகையும் இல்லை. எந்த காரணமும் அதற்கு இல்லை. திருக்கார்த்திகையே தமிழர்களின் ஒளி விழா.

அரசியல் மீட்சி மட்டுமல்ல பண்பாட்டு மீட்சியும் நமக்கு அவசியம்

- அறிவரன் பா




#VellaporaanVivasayi












#VellaporaanVivasayi

# பெருவிழா குறித்த கலந்தாய்வு | செப்டம்பர் 22, 2019

வீரத்தமிழர் முன்னணி சார்பில் தஞ்சையில் விரைவில் நடைபெறவுள்ள அருண்மொழி சோழன்(ராச ராச சோழன்) பேரரசன் பெருவிழாவை மிகச்சிறப்பாக நடத்துவது குறித்த கலந்தாய்வு, அண்ணன் சீமானின் முன்னிலையில் இன்று காலை 11 மணியளவில் அன்னை அருள் திருமண அரங்கம், கிழக்கு தாம்பரத்தில் நடைபெற்றது. இக்கலந்தாய்வில் நமது பிரிவு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் நமது பிரிவு உறுப்பினர்களிடம் திரட்டப்பட்ட நிதி ரூ 25,000 /- நமது பிரிவின் சார்பில் வீரத்தமிழர் முன்னணி பொறுப்பாளர்களிடம் நன்கொடையாக ஒப்படைக்கப்பட்டது.



# விக்கிரவாண்டி தேர்தல் பிரச்சாரம் குறித்து திட்டமிடலுக்கான கலந்தாய்வு | அக்டோபர் 02, 2019

அக்டோபர் 12 & 13 விக்கிரவாண்டி தேர்தல் பிரச்சாரத்தில், தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள் பிரிவின் சார்பில் பங்கேற்பது குறித்து திட்டமிடலுக்கான கலந்தாய்வு இன்று (அக்டோபர் 02, 2019) நமது கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. பிரச்சாரத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்த நபர்கள் இதில் கலந்து கொண்டனர்.



இராவணன் குடில்
கதவு எண். 8, மருத்துவமனை சாலை, செந்தில் நகர், போரூர், சென்னை - 600116.
itew@naamtamilar.org | www.naamtamilar.org | +91 89398 66242